வகுப்பு : 11

தேர்வு எண்

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

நேரம் : 3.00 மணி]

## வணிகவியல்

[மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி –I

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

20X1 = 20

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. இடத்தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது.
அ) போக்குவரத்து ஆ) பண்டக சாலை இ) விற்பனையாளர் ஈ) காப்பீடு
2. அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்
அ) பொருளாதாரச் செயல்பாடுகள் ஆ) பண நடவடிக்கைகள்
இ) பொருளாதாரச் சாரப்பற்ற செயல்பாடுகள் ஈ) நிதி நடவடிக்கைகள்
3. எந்த அமைப்பு ஒரே ஒருவராக உரிமையாளர், நிறுவனர் மற்றும் மேலாளர் என்ற வகையில் இருக்கும்?
அ) கூட்டு நிறுவனம் ஆ) அரசு நிறுவனம் இ) கூட்டுறவுச் சங்கம் ஈ) தனியாள் வணிகம்
4. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு
இ) அரசின் வழிகாட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்
5. கூட்டுறவு அமைப்பில் உறுப்பினர்கள்
அ) யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆக முடியாது ஆ) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்
இ) யார் வேண்டுமானாலும் இருக்கலாம் ஈ) மேற்கண்டவற்றில் எதுவுமில்லை
6. இந்திய மைய வங்கி என்பது
அ) பிஎன்பி ஆ) எஸ்பிஐ இ) ஐ.சி.ஐ.சி.ஐ ஈ) ஆர்.பி.ஐ
7. மிக வேகமான போக்குவரத்திற்கான வழி என்ன?
அ) தொடர்வண்டி ஆ) சாலை இ) கடல் ஈ) விமானம்
8. காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு -------- ஆகும்.
அ) மிக்க நம்பிக்கை ஆ) கூட்டுறவு இ) பகர உரிமை ஈ) அண்மைக் காரணம்
9. பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை
அ) உற்பத்தி மேம்பாடு ஆ) செலவுகளை குறைத்தல்
இ) இலாபம் ஈட்டுதல் ஈ) பண்டகக் காப்பு
10. நெறிமுறைகளுக்கான தேவைகள்
அ) உயர்மட்ட மேலாண்மை ஆ) நடுத்தர அளவிலான மேலாளர்கள்
இ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்
11. நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் ----------
அ) கடனீந்தோர் ஆ) உரிமையாளர்கள் இ) கடனாளிகள் ஈ) இவை எதுவும் இல்லை
12. உற்பத்தி துறையின் கீழ் ஒரு குறு நிறுவனத்தின் முதலீட்டு உச்ச வரம்பு ------ லட்சத்திற்கு மிகக்கூடாது.
அ) 10 ஆ) 20 இ) 25 ஈ) 50
13. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது.
அ) வியாபாரம் ஆ) தொழிற்சாலை இ) வணிகம் ஈ) வர்த்தகம்
14. உற்பத்தியாளரிடம் பொருட்களை வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவர் ------
அ) உற்பத்தியாளர் ஆ) மொத்த வியாபாரி இ) சில்லறை வியாபாரி ஈ) நுகர்வோர்கள்
15. நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுக்கு சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை ------- என்பர்.
அ) மடங்கு கடைகள் ஆ) முகவர்கள்
இ) தெருக் கடை வியாபாரிகள் ஈ) சுற்றாடும் வியாபாரிகள்
16. நாடுகளுக்கிடையே சரக்கு, சேவை, அறிவுசார் உரிமைகள், தொழில் நுட்பம் மற்றும் மனித உழைப்பு ஆகியவை இடம்பெயருவது
அ) பன்னாட்டு வியாபாரம் ஆ) பன்னாட்டு வணிகம்
இ) மறு ஏற்றுமதி வியாபாரம் ஈ) உள்நாட்டு வியாபாரம்
17. ஏற்றுமதியாளரால் சுங்க நடைமுறைகளைப் பின்பற்ற நியமிக்கப்படும் முகவர்
அ) அகற்றீட்டு முகவர் ஆ) அனுப்புகை முகவர் இ) கழிவு முகவர் ஈ) தன் பொறுப்பு முகவர்

TPR / M.11 / Com / 1

Scanned with CamScanner

18. சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை
அ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு
ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு
இ) ஒப்புக் கொண்ட வாக்குறுதி
ஈ) ஒப்பந்தம்
19. இந்தியாவில் வேளாண்மை வருமானம் என்பது
அ) முழுவதும் வரி விதிப்பிற்குட்பட்டது
ஆ) முழுவதும் வரி விலக்கிற்குட்பட்டது
இ) வருமானமாக கருதப்படுவதில்லை
ஈ) மறைமுக வரி
20. GST யின் விரிவாக்கம்.
அ) சரக்கு மற்றும் அளிப்பு வரி
ஆ) அரசு விற்பனை வரி
இ) சரக்கு மற்றும் சேவை வரி
ஈ) பொது விற்பனை வரி

## பகுதி - II

ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 7x2=14
வினா எண்.30–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21. பண்டமாற்று முறை என்றால் என்ன?
22. வணிகத்தை வரையறு.
23. கூட்டுரு சாரா பேரளவு நிறுவனங்களைப் பற்றிச் சுருங்கக் கூறுக.
24. துறைவாரி அமைப்புகளுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.
25. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன?
26. தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் (BPO) என்றால் என்ன?
27. அஞ்சலக சேமிப்பு திட்டங்கள் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.
28. ஒப்பந்தம் என்றால் என்ன?
29. கணக்கீட்டு ஆண்டு என்றால் என்ன?
30. முத்ரா வங்கி எவ்வகை நிறுவனங்களுக்கு கடன் வழங்குகிறது?

## பகுதி – III

குறிப்பு : ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 7x3=21
வினா எண். 40–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

31. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
32. அரசு நிறுமம் என்றால் என்ன?
33. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?
34. மின்னணு வங்கியியல் என்றால் என்ன?
35. குளிர்சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன?
36. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக. (ஏதேனும் 3)
37. சரக்காணையின் உள்ளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 3)
38. நபர் என்ற சொல்லில் யாரெல்லாம் அடங்குவர்?
39. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் 3)
40. R என்பவர் 10,00,000 மதிப்புள்ள மகிழ்வுந்தை விற்பனை செய்ய S –க்கு வாக்குறுதி அளிக்கின்றனர். S என்பவர் பதிலுக்கு பணம் தருவதாக வாக்குறுதி அளிக்கிறார்? இது எவ்வகையான ஒப்பந்தம்? விளக்கம் தருக.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. அ) பண்டமாற்று முறையின் குறைபாடுகள் யாவை?
(அல்லது)
ஆ) நேரடி வரியையும் மறைமுக வரியையும் வேறுபடுத்துக. (ஏதேனும் 5)
42. அ) உற்பத்தி தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் – ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5)
(அல்லது)
ஆ) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
43. அ) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5)
(அல்லது)
ஆ) பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகளை குறிப்பிடுக. (ஏதேனும் 5)
44. அ) கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5)
(அல்லது)
ஆ) துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பியல்புகளை விவரி.
45. அ) பொது கழகத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 5)
(அல்லது)
ஆ) உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை?(ஏதேனும் 5)
46. அ) பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை? (ஏதேனும் 5)
(அல்லது)
ஆ) சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களை விவரி. (ஏதேனும் 5)
47. அ) போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரி. (ஏதேனும் 5)
(அல்லது)
ஆ) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5)



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com